நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை: திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஜீன் திங்கள் 12 ம் நாள் சனிக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 271/2014
CNR.No.TNTS02-000989-2014

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
கடையநல்லூர் கா.நி.கு.எண் 308/2013 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

1. சுடலை மணி (வயது 25/2013)
த.பெ.இசக்கி பாண்டியன்,
மெயின் ரோடு,
சுந்தரேசபுரம். ... எதிரி

இவ்வழக்கு 07.11.2014 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.காத்தபாண்டி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## <u>தீர்ப்புரை</u>

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u> –

19.08.2013 ம் தேதி 18.30 மணிக்கு தென்காசி to மதுரை NH ரோட்டில் தெற்கிருந்து வடக்காக சரவணகுமார் என்பவர் TN 45 BC 1328 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா ஸ்பிளன்டர் இருசக்கரவாகனத்தில் சாட்சி 3 மகேஷ் யை பின்னால் வைத்துக் கொண்டு போய்கொண்டிருந்த போது இவர்களுக்கு எதிரே அதே ரோட்டில் வடக்கிருந்து தெற்காக வந்த TN 23 X 3672 என்ற பதிவெண் கொண்ட லாரியை எதிரி சுடலைமணி அதிக வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இருசக்கரவாகனத்தை மோதியதில் சரவணக்குமார் ரோட்டில் வலது பக்கமாக கீழே விழுந்து, லாரியின் வலபுறம் பின்பக்கம் உள்ள டயர் சரவணக்குமார் தலையில் ஏறி தலை சிதைந்து இறப்பு ஏற்படுத்தியும், சாட்சி 3 மகேஷிற்கு தலையில் ரத்த காயங்கள் உண்டு பண்ணி கொடுங்காயங்கள் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரிகள் மீது இதச பிரிவு 279, 338, 304(A) கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது கடையநல்லூர் காவல்

நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர் குற்றத்தினை மறுத்துள்ளார். இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) கு.வி.மு.ச.வின் படி எதிரி மீது இதச பிரிவு 279, 338, 304(A) ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர் தான் குற்றவாளி இல்லை என்று மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில், எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 10 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –**

19.08.2013 ம் தேதி 21.00 மணிக்கு மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் நிலையப்பொறுப்பில் இருந்த போது பாலமுருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண் 308/2013 பிரிவுகள் 279,338,304 (ஏ) இதசவாக வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் மேற்படி புகார் மனு அசாஆ.2 என்றும் முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.3 என்றும் அதன் அசல் நகலை கனம் தென்காசி நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக விசாரணை அதிகாரி ரகுராஜன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார், நகலை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 19.08.2013 ம் தேதி 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கமருதின் மற்றும் பரமேஸ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும், பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளதாகவும் அந்த பார்வை மகஜர் மற்றும்

வரைபடம் அ,சா.ஆ.4 மற்றும் அ,சா.ஆ.5 ஆக குறீயீடு செய்யப்படுகிறது என்றும் அதன் பின் அவர்கள் இருவரையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாவும் அதன் பின் சாட்சிகளான பாலமுருகன், சரவணன், மகேஷ், முருகையா மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பக்கீர்பாவா ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும் அதன் பின் 20.08.2013 ம் தேதி கடையநல்லூர் அரசு மருத்துமனைக்கு சென்று 07.00 மணி முதல் 09.30 மணி வரை இவ்வாகன விபத்து வழக்கில் இறந்துபோன சரவணக்குமார் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணையை நடத்தி உள்ளதாகவும் மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் பின்னர் காவலர் மகாலிங்கம் என்பவரை பணி நியமனம் செய்து சடலக்கூறாய்வுக்கு பின் நல்லடக்கம் செய்ய உறவினர்களிடம் ஒப்படைக்க செய்ய அறிவுரை செய்தார் என்றும் அதன் பின் 21.08.2013 எதிரியை காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்துள்ளார் என்றும் பின்னர் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. கண்ணன் அவர்களின் விசாரணைக்கு உட்படுத்தி அவரை விசாரித்து அவரிடம் ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாவும் மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் எண்ணம் இரண்டு அ.சா.ஆ. 7 மற்றும் அசாஆ.8 ஆக குறீயீடு செய்யப்படுகிறது என்றும் அதன் பின் இறந்து போன சரவணக்குமாரின் பிரேதத்தை பரிசோதனை செய்த பிரேத பரிசோதனை மருத்துவர் சண்முகையா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சடலக்கூறாய்வு அறிக்கை பெற்றுள்ளார் என்றும் மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறீயீடு செய்யப்படுகிறது என்றும் பின்னர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சைஅளித்த மருத்துவர்கள் ராஜ்குமார் மற்றும் மணிகண்டன் என்பவர்களை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் மேற்படி காயச்சான்று அசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவு 279, 338, 304(ஏ)ன் கீழ் சாட்சிகளின் அடிப்படையிலும், ஆவணங்களில்

அடிப்படையிலும் குற்ற இறுதியறிக்கை 20.10.2013 ல் தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான சங்கதிகளை எதிரியிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரி பொய்ச்சாட்சி என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா ? என்று வினவிய போது, எதிரி சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது இதச பிரிவு 279, 338, 304(A) ன் கீழ் உள்ள குற்றச்சாட்டானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

**8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார் –**

எதிரி, அ.சா.1 யை விபத்தினால் இறப்பினை ஏற்படுத்திய குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டானது அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**9. எதிரி தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார் –**

அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரிக்கு எதிரானக் குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**<u>10. தீர்வு</u> –**

19.08.2013ம் தேதி 18.30 மணிக்கு தென்காசி to மதுரை NH ரோட்டில் தெற்கிருந்து வடக்காக சரவணகுமார் என்பவர் TN 45 BC 1328என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா ஸ்பிளன்டர் இருசக்கரவாகனத்தில் சாட்சி 3 மகேஷ் யை பின்னால் வைத்துக் கொண்டு போய்கொண்டிருந்த போது இவர்களுக்கு எதிரே அதே ரோட்டில் வடக்கிருந்து தெற்காக வந்த TN 23 X 3672என்ற பதிவெண் கொண்ட லாரியை எதிரி சுடலைமணி அதிக வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இருசக்கரவாகனத்தை மோதியதில் சரவணக்குமார் ரோட்டில் வலது பக்கமாக கீழே விழுந்து, லாரியின் வலபுறம் பின்பக்கம் உள்ள டயர் சரவணக்குமார் தலையில் ஏறி தலை சிதைந்து இறப்பு ஏற்படுத்தியும், சாட்சி 3 மகேஷிற்கு தலையில் ரத்த காயங்கள் உண்டு பண்ணி கொடுங்காயங்கள் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவு 279, 338, 304(A) கீழ் குற்றம் புரிந்துள்ளதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. எதிரியின் மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கும் போது, புகார்தாரரான அ.சா.1 பாலமுருகன் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது என்றும் சாட்சிகள் சரவணன், மகேஷ் ஆகியோர்களை தெரியாது என்றும் வழக்கில் இறந்து போன சரவண குமார் என் பெரியப்பா மகன் என்றும் தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 12 வருடங்களுக்கு முன்பு சரவணக்குமாருக்கு விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள் என்றும் நான் சம்பவத்தை கேள்விபட்டு கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்றும் விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றும் கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி அவர் இறந்து விட்டார் என்றும் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள அ.சா.ஆ 1 கையொப்பம் என்னுடையது தான் என்றும் அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு நினைவில் இல்லை என்றும் காவல்நிலையத்தில் போலிசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 சரவணன் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது என்றும் இந்த வழக்கில் இறந்த சரவணக்குமார் என் நண்பன் என்றும் அ.சா1 பாலமுருகன் என்பரை தெரியும் என்றும் அவர் சரவணக்குமாரின் தம்பி ஆவார் என்றும் சரவணக்குமார் விபத்தில் காலமானார் என்றும் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றும் வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.3 மகேஷ் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது என்றும் அசா.1 பாலமுருகன், அசா.2 சரவணன் ஆகியோர்களை தெரியாது என்றும் வழக்கில் இறந்து போன சரவண குமார் என்பவரை தெரியாது என்றும் இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்றும் மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை வைத்துப் பார்க்கும் போது, எதிரி, விபத்து ஏற்படுத்தியதாக முன்னிலைப்படுத்தப்பட்ட அரசு தரப்பு வழக்கு வெகுவாக பாதிக்கிறது என்றும் மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட போதிலும் அரசு தரப்புக்கு ஆதரவாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

14. இந்த வழக்கில், அ.சா.4 தனது சாட்சியத்தில், அ.சா.1 னிடம் புகார் மனு பெறப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது ஆகியவற்றை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் இருப்பதால் அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரி விபத்து ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று முடிவுக்கு வர முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவு 279, 338, 304(A) ன் கீழ் உள்ள

குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டுக்கு அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி இல்லை என்று கண்டறிகிறது.

16. முடிவில், எதிரி மீது இதச பிரிவு 279, 338, 304(A) ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. இவ்வழக்கின் எதிரி கடந்த 21.08.2013 அன்று கைது செய்யப்பட்டு காவல்நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் ஜீன் திங்கள் 12 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.12 11:34:39 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | பாலமுருகன் |
| அ.சா.2 | சரவணன் |
| அ.சா.3 | மகேஷ் |
| அ.சா.4 | திரு.மாரியப்பன், சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் மனுவில் உள்ள கையொப்பம் | 19.05.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | புகார் மனு | 09.06.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.4 | அசல் |
| 3 | முதல் தகவல் அறிக்கை | 09.06.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.4 | அசல் |
| 4 | பார்வை மகஜர் | 09.06.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.4 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | மாதிரி வரைபடம் | 09.06.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.4 | அசல் |
| 6 | பிரேத விசாரணை அறிக்கை | 09.06.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.4 | அசல் |
| 7 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை– 1 | 09.06.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.4 | அசல் |
| 8 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை– 2 | 09.06.2026 | அ.சா.ஆ.8 | அ.சா.4 | அசல் |
| 9 | பிரேதபரிசோதனை அறிக்கை | 09.06.2026 | அ.சா.ஆ.9 | அ.சா.4 | அசல் |
| 10 | காயச்சான்று | 09.06.2026 | அ.சா.ஆ.10 | அ.சா.4 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள் –** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் –** இல்லை.

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.12 11:34:45 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**குறிப்பு :–**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.